**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# பொருள்சார் பண்பாடு நோக்கில் - சங்கு வளையல்

**செ. விஜய்சுந்தர்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-600 059

**ஏ. பால்பிரபு சாந்தராஜ்**
தமிழ்த்துறைத் தலைவர், நெறியாளர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-600 059

**ஆய்வுச் சுருக்கம்**

*புழங்கு பொருட்கள் மீது மனிதன் தன் உணர்வுகளை மதிப்பீடுகளை விழுமியங்களை ஏற்றி உறவாடியதால் புழங்கு பொருட்கள் பண்பாடு சார்ந்தவையாக உள்ளன.தமிழர் வரலாறு என்பது புழங்கு பொருட்கள் மீது கட்டமைக்கப்பட்டது ஆகும்.புழங்கு பொருட்கள் மனிதனால் உருவாக்கப்பட்டது என்றாலும் அதன் மீது வழங்கப்படுகிற விழுமியங்கள் அதனை உருவாக்கியவர்களின் வாழ்க்கைச் சூழலைக் கொண்டே சமூகத்தில் வழங்கப் படுகின்றன. புழங்கு பொருட்கள் சார்ந்த இலக்கியத் தரவுகளைக் கொண்டு இக்கட்டுரை பொருள்சார் பண்பாட்டில் பழந்தமிழர்களின் புழங்கு பொருட்களுள் ஒன்றான சங்கு வளையல் குறித்து ஆராய்கிறது.*

**திறவுச்சொற்கள்**

*சங்கு வளையல்கள்-வேளாப் பார்ப்பான்-தொடி-வளையல்கள்-சங்க இலக்கியம்- தமிழ்ப் பண்பாடு-புழங்கு பொருட்கள்*

## முன்னுரை

பொருட்கள் ஓர் இனத்தின் வரலாற்றை அறிய உதவும் பண்பாட்டுக் கூறுகள் ஆகும். அவற்றை புழங்கு பொருட்கள் என்று சொல்வதற்கான காரணம் அவை அன்றாட வாழ்வின் தேவைகளுக்காகப் பயன்பட்டமையேயாகும். காலப்பகுப்பிற்கும் பண்பாட்டை அறிவதற்கும் புழங்கு பொருட்கள் மீது கட்டமைக்கப்பட்டுள்ள வாய்மொழி வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் இன்றியமையாதச் சான்றினைப் பகர்கின்றன. புழங்கு பொருட்கள் குறித்தான வகைகள், இனம், தொழில்,பண்பாடு,கலை உணர்வு, சுற்றப்புறச் சூழல் ஆகியவற்றைப் பொருத்து வேறுபடுகின்றன. அவற்றுள் தமிழர்கள் கலை உணர்வுடன் உருவாக்கிப் பயன்படுத்திய அணிகலனான சங்கு வளையல்கள் வாயிலாக தமிழரின் தேர்ந்த பண்பாட்டு மரபினை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியத்தில் புழங்கு பொருட்கள்

சங்க இலக்கியத்தில் பல்வேறு வகையிலான புழங்கு பொருட்கள் சார்ந்த குறிப்புகள் காணப்படுகிறது அவற்றுள் வேளாண்சார் பொருட்கள், தொழில் சார் புழங்கு பொருட்கள், வீட்டு உபயோகம் சார்ந்த பொருட்கள், மற்றும் அணிகலன்கள் என பல்வேறு வகையிலான புழங்குப் பொருட்களைக் காணமுடிகின்றது. புழங்கு பொருட்கள்,

செய்யப்படும் செய்முறைகள் குறித்தும் அவை என்னத் தேவைகளை நிறைவு செய்ய செய்யப்பட்டன குறித்தும் பல்வேறு தரவுகள் சங்க இலக்கியப் பாடல்களில் காணக்கிடைக்கின்றன.

பழந்தமிழர்கள் அதிகமாக பயன்படுத்திய பொருட்களாக; வளையல்கள், இழை அணிகள், பூமாலைகள், நீல மணிகள், தேர்கள், வில், அம்பு போன்ற புழங்குபொருட்கள் சங்க இலக்கியப் பாடல்களில் அதிக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் 'சங்குவளையல்' என்ற அணிகலன் பொருள்சார் பண்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வளையல்கள் என்பது கைகளில் அணியும் அணிகலன் என்று யாவரும் அறிந்த செய்தியாகும். ஆனால், சங்கஇலக்கியத்தில் சங்குவளையல்கள் கைவளையல், தோள் வளையல், வீர வளையல் (போர்களில் ஆண்கள் அணிந்து கொள்ளும் அணிகலன்) என மூன்றாகப் பகுத்துக் கூறப்படுகிறது. சங்க இலக்கியத்தில் வளையல்களை பல்வேறு பொருள்களைக் கொண்டு உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக தங்கம், கடற்சங்கு, தந்தம் போன்ற பொருட்களிலிருந்து வளையல்களை கலை நயத்தோடு உருவாக்கி பயன்படுத்தியுள்ளனர். மக்கள் பயன்பாட்டில் மிக அதிக அளவில் புழக்கத்தில் இருந்தவை கடல்சங்கை அறுத்து செய்யப்பட்ட சங்கு வளையல்களே ஆகும். ஏனெனில் எளிமையாகவும், அழகாகவும், குறைந்த விலையிலும், அனைவரும் வாங்கிப் பயன்படுத்தும் விதமாக கடல் சங்கில் செய்யப்பட்ட வளையல்கள் மக்கள் எளிமையாக பயன்படுத்தும் புழங்கு பொருளாக இருந்துள்ளது. மேலும், வளையல்கள் என்பது சங்ககால மக்களிடம் அழகுசாதனப் பொருட்களாக மட்டுமல்லாது, வளையல்கள் மங்கலப் பொருட்களாகவும் பார்க்கப் பட்டுள்ளது.

### சங்கின் வகைகள்

கடல் சங்குகள் எண்ணிலடங்கா பலவகைகளில் காணப்படுகிறது. அதில் மக்களின் பயன்பாட்டில் உள்ள சில சங்கு வகைகளாக நந்து, சுரிமுகம், நாகு,கோடு, இடம்புரி, வலம்புரி, தரா, பணிலம், சுத்தி,வெள்ளை, வளை, சங்கு என பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. கடல் சங்குகளில் வலம்புரி சங்கு, இடம்புரி சங்கு என்று இருவகைகள் உண்டு. வலம்புரிச் சங்கு கிடைப்பது அரிது. எனவே வலம்புரிச் சங்கிற்கு விலையும் மதிப்பும் அதிகம். சங்கிற்கு தமிழில் 'வளை' என்றும் பெயர் உண்டு.அரண்மனையில் வாழ்ந்த அரசமகளிர் தொடங்கிக் குடில்களில் வாழ்ந்த ஏழைகள் வரை அனைவரும் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர்.

**"பொலற்கொடி தின்ற மயிர்வார் முன்கை-**

**வலம்புரி வளையோடு கடி கைநூல்**
**யாத்து"** (நெடு.நு:141-142)

என்ற பாடலில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய தேவியான பாண்டிமாதவி தனது கைகளில் வலம்புரிசங்கில் செய்த வளையல்களை அணிந்திருந்ததாகப் பாடப்பட்டுள்ளது. அரச மகளிர் சங்கு வளையல்கள் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

### சங்கு எடுத்தலும் சங்குவளை உருவாக்கமும்

கடலின் ஆழத்திலிருந்து மணலைத் தோண்டி நெடிய முயற்சிகளுக்குப் பின்னர் சங்குகளைக் கடலில் இருந்து எடுத்து வருகின்றனர். இவ்வாறு எடுக்கப்படுகின்ற சங்கினை சேகரித்து புள்ளிகள், கோடுகள் இல்லாத நல்ல தரமான சங்குகளைத் தேர்வு செய்கின்றனர். பின்னர் அவற்றை சுத்தம் செய்து 'அரம்' என்கின்ற அறுப்பு கருவியைக் கொண்டு தேவையான அளவுக்கு நேர்த்தியாகவும் வடிவமாகவும் சங்குகளை அறுத்து எடுக்கின்றனர். அறுக்கப்பட்ட சங்கில் உள்ள தேவையற்ற இடங்களை 'அரம்' கொண்டு சீர் செய்கின்றனர். சங்கினது அளவினைக் கொண்டும், பக்குவத்தைக் கொண்டும், தடிமனைக் கொண்டும், கை வளையலாகவும், தோள் வளையலாகவும் செய்யப்பட்டதற்கானச் சான்றுகளைச் சங்கப் பாடல்களின் மூலமாக அறிய முடிகிறது.

*“அரம் போழ்ந்து அறுத்த கண் நேர்
இலங்குவளை” (மது.காஞ்:316)*

எனும் நெய்தல் நிலத்து இயல்பினைக் குறிப்பிடும் வரிகளில் நெய்தல் நில மக்கள் சங்கை அறுத்து வளையல்கள் உருவாக்கி பயன்படுத்தினர், என்று அறிய முடிகிறது. சங்கு வளையல்கள் நெய்தல் நிலம் சார்ந்த மக்களின் பண்பாட்டினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. சங்கினைத் தேடி எடுத்து அதைக் கூர்மைப்படுத்தி வளையல்களாக உருவாக்கும் தொடர் செயல்பாடுகள் நெய்தல் நில மக்களின் தொழில் சார்ந்த பண்பாட்டினைத் தெளிவுப்படுத்துகிறது. பொருள்கள் ஓர் இனத்தின் வாழ்வியலைப் பிரதிபலிப்பவை என்பதும் புலனாகிறது.

*“அரம்போழ் அவ்வளை செறிந்த முன்கை”[3]
(அகம்:349)*

எனும் பாடலில் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி, அரத்தால் பிளந்து ஆக்கப்பெற்ற அழகிய வளையல்கள் செறிந்த அவளுடைய கைகளைப் பற்றி மணந்து கொண்டவன் தலைவன் என்று தலைவனைப் பற்றி குறிப்பிடும் பாடலில் சங்கை அரம் எனும் கூர்மையான கருவியினைக் கொண்டு சங்கைப் பிளந்து வளையல்கள் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

*அங்கங்குலைய அரிவாளில் நெய்பூசி
பங்கப்பட விரண்டு கால்பரப்பி*

*சங்குதனை கீர்கீர் என அறுக்கும் கீரன்*

*சங்கறுப்பது எங்குலம் சங்கரனாருக்கு
ஏதுகுலம்*

என்ற பழம் பாடல்கள் மூலம் சங்கை அறுக்கும் தொழிலில் சங்கப் புலவர்களுள் ஒருவரான நக்கீரர் ஈடுபட்டுள்ளார் என்பதனை அறிய முடிகிறது.

சங்கு அறுக்கும் அரிவாள் சூடாகாதபடி நெய்யைச் பூசி பின்னர், இரண்டுகால்களையும் பரப்பி சங்கினை அறுக்கும் போது ஏற்படும் கீர்..கீர்..ஒலியோடு சங்கு அறுத்து வளையல்கள் செய்த மரபையும் தெளிவாகக் காணமுடிகின்றது.

*“வேளாண் பார்ப்பான் வாளரந் துமித்த*

*வளை களைந்து ஒழிந்த கொழுந்தின்
அன்ன,*

*தலை பிணி அவிழா,சுயி முகப் பகன்றை,*

*சிதறல் ஆம் துவலை நூலின்
மலரும்” (அகம்:24)*

என்ற பாடல் வேள்வி செய்யாத பார்ப்பனர்கள் சங்கை அறுத்து வளையல் செய்து பிழைத்து வந்தனர் என்றும் அந்த வளையலை கையிலிருந்து கழற்றி வைத்திருப்பது போல அடுக்குக் கொத்தாக பகன்றைப் பூ மலரும் என்றும் குறிப்பிடுகிறது. இப்பாடலின் மூலம் வளையல் களை செய்கின்ற பார்ப்பனர்கள் குறித்தும் சங்கு வளையல்கள் குறித்தும் அறிய முடிகிறது. சங்கு வளையல்கள் செய்யும் தொழில் சங்க காலத்தில் குறிப்பிடத்தக்க தொழிலாக இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

### வளையல்கள்

தலைவன் தலைவியின் அழகை வர்ணிக்கும் போது என் தலைவி, வாள் அரத்தால் அறுத்த சங்கு வளையலை முன்கையில் அணிந்தவள் என்று குறிப்பிடுகிறான்.சங்க காலப்பெண்கள் நேர்த்தியானசங்கு வளையல் களை கைவளையல்களாக அணிந்துள்ளனர்.

*“அகன்’தொடி’செறித்த‘முன்கை’ஒள்நுதல்”
(நற்:77)*

என்ற பாடலில் நெய்தல் நிலத் தலைவி ஒருத்தி, விரைவில் தலைவன் மணந்து கொள்ள வேண்டி, ஊர் மக்களோ என்னை கை வளையல்கள் உடையும் படி தலைவன் அணைக்க வேண்டும் என்கின்றனர். தலைவனை நான் திருமணத்திற்கு முன்னமே இவ்வாறு அணைத்தால் என்னை பழி சொல்லும் பேசுவார்களே இந்த ஊர் மக்களை என்னவென்று சொல்வது? என்று தோழியிடம் கூறுகிறாள். அதனால் தலைவன் விரைவில் மணந்து கொள்ளுதல் வேண்டும் என்பது இப்பாடலின் உள்ளுறை ஆகும். வளையல்கள் உடையும் படி தலைவன் தலைவியை அணைத்து அன்பை வெளிப்படுத்துபவனாக இருக்க வேண்டும் என்பது இப்பாடலின் மூலம் தெளிவாகிறது.

காதலர்களுக்கான அன்புடைமையில் வளையல்கள் குறிப்பிடத்தக்கதாகும். பெருள்சார் பண்பாட்டில் வளையல்கள் அன்பை வெளிப்படுத்துவனவாகவும் சிறந்த உவமைப் பொருளாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**"முன்கை வார்கோல் எல்வளை உடைய**
**வாங்கி"** (நற்:239)

பாலை நிலத்தலைவனோடு உடன்போக்கு நிகழ்த்திய தலைவியை காணவில்லை என்று தலைவியின் தாய் தோழியிடம் கேட்ட போது தோழி தலைவியின் தாயிடம் கூறுகிறாள். பல வளையல்களை தன் முன்கைகளில் அணிந்த உன்மகள் தலைவ னோடு சென்றுவிட்டாள். இப்பாடல் தலைவியின் அழகே வளையல்களால் நிரம்பியது என்று எடுத்துரைக்கின்றது. சங்க காலத் தலைவிகளின் முக்கிய புழங்குப் பொருளாக வளையல்கள் இருந்துள்ளது.

**தொகுவளை முன்கை மடந்தை நட்பே**
(குறு:15)

பாலை நிலத் தலைவனோடு பல வளையல்களை முன்கைகளில் அணிந்த தலைவி திருமணம் செய்து கொண்டதை செவிலித் தாய் நற்றாயிடம் கூறும் வரிகள் மேற்கண்ட பாடலில் அமைந்துள்ளது. இப்பாடலில் தலைவியானாவள் முன்கை களில் பல வளையல்களை அணிந்திருந்தாள் என்ற குறிப்பினை அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகைப் பாடல்களான 'நற்றிணையில்' வளையல்கள் பற்றிய குறிப்புகள் '41' பாடல்களில் இடம் பெற்றுள்ளது. மேலும், 'குறுந்தொகையில்' வளையல்கள் '38' பாடல்களில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இவ்வாறு சங்க இலக்கிய பாடல்களின் மூலமாக கொள்ள வேண்டியது மக்களின் மிக முக்கிய புழங்குப் பொருள்களில் ஒன்றாக வளையல் கள் இருந்துள்ளதை தெளிவாக அறிய முடிகின்றது. இவற்றில் சங்கு வளையல்கள் முக்கிய இடம்பெறுகின்றது. மேலும் சங்கப் பாடல்களில் கைவளையும், தோள்வளையும், வீரவளையும் இடம்பெற்றுள்ளது.

## முடிவுரை

சங்கு வளையல்களை, பழந்தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையில் சிறப்பானப் பொருளாகப் பயன்படுத்தி உள்ளனர். அரச மகளிர் தொடங்கி குடிமக்கள் வரை அனைத்து மக்களிடமும் புழக்கத்தில் இருந்த பொருளாக சங்குவளையல்கள் இருந்துள்ளது. பழந்தமிழ் மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் அவர்களின் சிறப்பான வாழ்க்கை முறையையும், வாழ்க்கைச் சூழலை யும் வெளிப்படுத்தியுள்ளது. அவற்றுள் சங்கு வளையல்கள் பயன்பாடு பழந்தமிழ் மக்களோடு இரண்டறக் கலந்துள்ளது.

பொருள் சார்ந்த பண்பாட்டில் சங்கு வளையல்கள் சங்க கால மக்கள் வாழ்க்கையில் தொழில்சார்ந்த நிலையிலும் பொருளாதாரம் சார்ந்த நிலையிலும் அன்பை வெளிப்படுத்தும் பண்பிலும் குறிப்பிடத்தக்கவைகளாக இருந்துள்ளது.

## துணை நூல்கள்

1. உ.வே சாமிநாதையர், குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சா. நூல்நிலையம், ஏழாம் பதிப்பு, 2017.
2. சிவ. செந்தில்நாதன் (பதிப்பாசிரியர்), தமிழ்த் தடம் காலாண்டு ஆய்விதழ், பரிசல் புத்தக நிலையம், சென்னை, நவம்பர், 2023.
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016.
4. சு. வித்தியானந்தன், தமிழர் சார்பு, குமரன் புத்தக இல்லம், சென்னை, 2013.
5. வித்துவான் எச். வேங்கடராமன் (பதிப்பாசிரியர்), நற்றிணை மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சா. நூல்நிலையம், மூன்றாம் பதிப்பு, 2013.
6. லூர்து.தே, நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 2016.